# அக்டோபர் – 25 – வியாழன்

**புனித கிரிஸ்பினியன்**

**நீதிமான்களே, ஆண்டவரில் களிகூருங்கள்: திபா. 33:1**

## முதல் வாசகம் : ஏபேசியர் 3 : 14 - 21

சகோதர சகோதரிகளே!, விண்ணுலகிலும் மண்ணுலகிலும் உள்ள ஒவ்வொரு குடும்பமும் உண்மையிலேயே குடும்பமாய் விளங்குவதற்குக் காரணமாய் இருக்கிற தந்தையிடம் நான் மண்டியிட்டு வேண்டுகிறேன். அவருடைய அளவற்ற மாட்சிக்கேற்ப உங்கள் உள்ளத்திற்கு வல்லமையும் ஆற்றலும் தம் தூய ஆவி வழியாகத் தந்தருளுவாராக! நம்பிக்கையின் வழியாக, கிறிஸ்து உங்கள் உள்ளங்களில் குடிகொள்வாராக! அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக! இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்துவுடைய அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து, அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்துகொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக! அதன்மூலம் கடவுளின் முழுநிறைவையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்களாக! நம்முள் வல்லமையோடு செயல்படு பவரும் நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுளுக்கே திருச்சபையில் கிறிஸ்து இயேசு வழியாக தலைமுறை தலைமுறையாக என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்.

**பதில்பாடல் :** ஆண்டவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது.

## நற்செய்தி : லூக்கா 12 : 49 – 53

அக்காலத்தில் இயேசு தமது சீடர்களை நோக்கிக் கூறியதாவது : மண்ணுலகில் தீமூட்ட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். ஆயினும் நான் பெறவேண்டிய ஒரு திருமுழுக்கு உண்டு. அது நிறைவேறுமளவும் நான் மிகவும் மனநெருக்கடிக்குள்ளாகி இருக்கிறேன். மண்ணுலகில் அமைதியை ஏற்படுத்த வந்தேன் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை, பிளவு உண்டாக்கவே வந்தேன் என உங்களுக்குச் சொல்கிறேன். இதுமுதல் ஒருவீட்டிலுள்ள ஐவருள் இருவருக்கு எதிராக மூவரும் மூவருக்கு எதிராக இருவரும் பிரிந்திருப்பர். தந்தை மகனுக்கும், மகன் தந்தைக்கும், தாய் மகளுக்கும், மகள் தாய்க்கும், மாமியார் தன் மருமகளுக்கும், மருமகள் மாமியாருக்கும் எதிராகப் பிரிந்திருப்பர்.“ என்று கூறினார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் திருமுழுக்கின் தத்துவத்தைப் பற்றி இயேசு நமக்கு சுட்டிக்காட்டுகிறார். நம்முடைய திரு அவையில் மூன்று விதமான திருமுழுக்குகள் உண்டு. தண்ணீர் திருமுழுக்கு: இயேசுவின் முன்னோடியான யோவான் நீரினால் திருமுழுக்கு கொடுத்து மக்களை மனமாற்றத்திற்கு அழைத்தார். இங்கு நீர் புதுவாழ்வின் அடையாளமேயன்றி இறை உதவியையோ, இறை உறவையே சுட்டிக்காட்டவில்லை. ஆவியில் திருமுழுக்கு: புதிய மனிதர்களாக வாழ தூய ஆவியின் துணை அவசியம்.அவருடைய துணையின்றி நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாது, என்ற காரணத்தினால் கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கத்தில் திருவருட்சாதனமாக திருமுழுக்குத தரப்படுகிறது. இதில் தூய ஆவி கொடையாகப் பொழியப்படுகின்றார். இரத்தத்திருமுழுக்கு: இரத்தம் சிந்தி கடவுளுக்கு சாட்சியாக மாறுவது இவ்வகை இன்றைய நற்செய்தி வாசகம் இந்தத் திரு முழுக்கைச் சுட்டிக்காட்டுகிறது. இரத்தம் சிந்தி மறைசாட்சியாக மாறினவர்கள் அனைவருமே இயேசுவின் இரத்தத் திருமுழுக்கில் பங்கெடுக்கக்கூடியவர்களே. எனவே இயேசுவின் திருமுழுக்கில் புதிய காலம் பிறக்கின்றது. அது புதுப் படைப்பின் காலம். அதில் நாம் அனைவரும் இயேசுவுக்காக இரத்தம் சிந்தி சாட்சியாக வாழும் அளவுக்கு நமது விசுவாசம் ஆழமானதாக இருக்கின்றதா? என்பதை சிந்தித்து பார்க்கழைக்கப்படுகின்றோம்.